Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, UTHANGARAI.

Calendar

Miscellaneous Case No.CC.No. 57/2018

Preliminary Register

Deposition of ....PW5 Witness for........... Petitioner

| | |
|---|---|
| Name | : சதீஸ்குமார் |
| Father's /Husband Name | : ஆதி ராகவன் |
| Village | : ஊமையனூர் |
| Taluk | : ஊத்தங்கரை |
| Calling | : PW5 |
| Occupation | : கம்ப்யூட்டர் சென்டர் வைத்துள்ளேன் |
| Religion | : |
| Age | : 31 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 21.06.2023

Accused present.

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து கம்ப்யூட்டர் சென்டர் வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியாது. சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு தேவராஜ் மனைவி அலமேலு என்பவர் எனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு தனது கணவர் தேவராஜ்-க்கு விபத்து ஏற்பட்டு அடிப்பட்டதாக என்னை அழைத்தார். நானும் அலமேலும் சம்பவயிடத்திற்கு வருவதற்குள் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். சம்பவம் திருப்பத்தூர் ரோட்டில் பாண்டவர் நகரில் நடந்தது. தேவராஜை நான் மருத்துவமனையில் பார்த்தபோது அவருக்கு தலை மற்றும் தோள்பட்டையில் அடிப்பட்டிருந்தது. மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சுமார் 3 நாட்கள் கழித்து தேவராஜ் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தேவராஜ் இறந்ததாக நஷ்ட ஈடு பெறுவதற்காக அ.சா.1 பொய் புகார் கொடுத்திருக்கிறார் என்றும், அதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

S SAHAANA

Judicial Magistrate,
Digitally signed by S SAHAANA
Location: Uthangarai.
Date: 2023.06.21 16:24:31 +0530

Judicial Magistrate,
Uthangarai.